**மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் (சீஈசீபீ) - 2013**

மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் (சீஈசீபீ), மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தின் திரண்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் (வரையறுத்த மத்திய பொறியியல் சேவைகள் - சீஈஎஸ்எல்) என்பவற்றின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. துணைநிலைக் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் உரிய துணைக் கம்பனியின் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட பொதுத் துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றினால் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

**(அ) முனைப்பழியுள்ள அபிப்பிராயம்- தொகுதி**

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, திரண்ட நிதிக்கூற்றுக்களானவை மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**(ஆ) முனைப்பழியுள்ள அபிப்பிராயம்- சீஈசீபீ**

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, திரண்ட நிதிக்கூற்றுக்களானவை மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 தொகுதி நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் இணைந்த கம்பனியின் கொடுக்கல் வாங்கல்கள் ஒவ்வொன்றும் ஏனையவற்றுடன் சமப்படுத்தப்பட்டிருக்காததுடன் இதன் விளைவால் அந்த கொடுக்கல் வாங்கலின் உண்மைத்தன்மை தனிப்பட்ட மற்றும் தொகுதி நிதிக்கூற்றுக்களிற்கு அவற்றினுடைய தாக்கம் கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

| விடயம் | துணைக் கம்பனியன் நிதிக்கூற்றின் பிரகாரம் தொகை | சீஈசீபீ இன் நிதிக்கூற்றின் பிரகாரம் தொகை | வித்தியாசம் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிர்மாண வருமானம் / (செலவினம்) | 5,142,391,103 | (5,155,549,499) | 13,158,396 |
| வாகனங்களின் வாடகைக்கான வருமானம் / (செலவினம்) | 25,588,266 | (25,688,266) | 100,000 |
| கட்டிட வாடகை வருமானம் / (செலவினம்) | (132,000) | - | (132,000) |
| சீஈசீபீ இடமிருந்து சீஈஎஸ்எல் இற்கு நிதி மாற்றம் | - | 6,368,258 | 6,368,258 |
| மீள்நிதியிட வேண்டிய / செலுத்த வேண்டிய நிர்மாணச் செலவினம் | - | 320,545,239 | 320,545,239 |
| ஆலோசனைக் கட்டணம் | - | 500,000 | 500,000 |

(ஆ) கணக்காய்வில் செய்யப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம், தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் சீஈஎஸ்எல் இன் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தொகுதி நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துககாட்டல்கள் அவதானிக்கப்பட்டன.

| **நிதிக்கூற்றுக்களிலுள்ள விடயம்** | **கணக்காய்வில் செய்யப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் தொகுதி** | **தொகுதி நிதிக்கூற்றின் பிரகாரம் மீதி** | **கூட்டினைக்கப்பட்ட தொகை** |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| செலுத்த வேண்டிய தொழிலாரம்பிப்பு முற்பணம் | 3,657,367,563 | 4,209,970,258 | 552,602,695 |
| பெற வேண்டிய தொழிலாரம்பிப்பு முற்பணம் | 406,277,435 | 958,880,130 | 556,130,666 |
| பெறவேண்டிய பிடி காசு | 2,020,720,494 | 2,512,560,140 | 491,839,646 |
| செலுத்த வேண்டிய பிடி காசு | 196,175,386 | 697,074,921 | 500,899,535 |
| கடன்பட்டோர் | 6,164,693,501 | 8,678,703,483 | 2,514,009,982 |
| கடன்கொடுத்தோர் | 2,519,573,670 | 3,768,792,440 | 1,249,208,770 |

## 2.3. சீஈ.சீபீ இன் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) **இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ் 01)** – நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்- சீஈசீபீ இன் பிரதான ஆளணிக்கு சீஈஎஸ்எல் ஆல் செலுத்தப்பட்ட

ரூபா 1,356,000 ஆன தொகை நிதிக்கூற்றுக்களில் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ் 24)- தொடர்புபட்ட தரப்பினர் மற்றும் தொடர்புபட்ட தரப்பு கொடுக்கல் வாங்கல்கள்-** துணைக் கம்பனிகளின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் சீஈசீபீ இன் முகாமைத்துத்தில் ஈடுபடல் அதாவது, துணைக் கம்பனியின் நிதி முகாமையாளராக செயற்பட்ட சீஈசீபீ இன் பிரதி பொது முகாமையாளர் (நிதி) மற்றும் துணைக் கம்பனியின் அடிமட்ட அலுவலகங்களின் செயற்பாட்டு முகாமையாளராக செயற்பட்ட சீஈசீபீ இன் அடிமட்ட அலுவலகத்தின் மேலதிக பொது முகாமையாளர்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றில் காட்டப்பட்ட வாடிக்கையாளர் கணக்கு மீதியிலிருந்து பெறவேண்டிய ரூபா 1,073,170,531 ஆன தொகை கண்டி தள அலுவலகத்தில் டி 1512 ஆம் இலக்கம் கொண்ட செயற்திட்ட கடன் மீதி தீர்க்கப்பட்டமை காரணமாக ரூபா 63,942,627 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சானது பணியகத்தால் கையேற்கப்பட்ட வீதி நிர்மாண செயற்திட்டங்களை துரிதப்படுத்துவதற்கு 2012 இல் பணியத்திற்கு ரூபா 3,601 மில்லியன் பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், அமைச்சானது இது தொடர்பில் பணியகத்திற்கு கிடைக்க வேண்டிய ஒப்பந்த கொடுப்பனவுகளிலிருந்து ரூபா 250 மில்லியன் தொகை அறவிடப்பட்டிருந்தது. மேலும், அந்த சொத்துக்களின் ஏதாவது தொழில் ரீதியான மதிப்பாய்வு மற்றும் ரூபா 3,351 மில்லியன் மானியப் பகுதியை தவிர்த்தல் என்பன மேற்கொள்ளாமல் அவற்றினை பணியகம் ரூபா 250 மில்லியனில் கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) 1481 மற்றும் 1496 ஆம் இலக்கங்கள் கொண்ட இரண்டு பூர்த்தியாக்கப்பட்ட நிர்மாண செயற்திட்டங்களின் சீராக்கப்பட்ட ஒப்பந்த தொகை 2013 ஆம் ஆண்டின் ஒப்பந்த வருமானத்தை மதிப்பிடுகையில் கணக்கிற்குள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நிர்மாண வருமானம் ரூபா 658,567 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ஆலோசனை கட்டணங்கள் தொடர்பில் தொழிலாரம்பிப்பு முற்பண மீதியில் உள்ளடக்கப்படட வரிப் பகுதி புறம்பாக கணக்கிடப்பட்டிருக்காததுடன் இதன்விளைவால், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றில் காட்டப்பட்ட செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி (வற்) மற்றும் தேசத்தை கட்டியெழுப்புதல் வரி (என்பீரீ) மற்றும் பெறப்பட்ட தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் முறையே ரூபா 2,346,603 மற்றும் ரூபா 1,091,208 ஆல் குறைத்தும் ரூபா 3,437,811 ஆல் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2013 இல் வழங்கப்பட்ட சீ 990, 991, 993 மற்றும் 921 ஆம் இலக்கங்கள் கொண்ட செயற்திட்டங்கள் தொடர்பான நான்கு விலைப் பட்டியல்கள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்காதுடன் இதன்விளைவால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்பட்டோர் மீதி மற்றும் ஒப்பந்த வருமானம் ரூபா 9,384,637 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) வாடிக்கையாளர் சான்றுபடுத்திய பட்டியல்களின் பிரகாரம், 1597 ஆம் இலக்க செயற்திட்டத்தின் பிடி காசு மீதி ரூபா 6,011,979 ஆக இருந்தது. இருந்தபோதிலும், நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், இது ரூபா 1,602,337 ஆக காட்டப்பட்டது. எனவே,

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றில் காட்டப்பட்ட பிடி காசு மீதி மற்றும் வாடிக்கையாளரிடமிருந்து பெறவேண்டிய கணக்கு மீதி முறையே ரூபா 4,409,642 ஆல் குறைத்தும் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.

(எ) 2013 இல் பெறப்பட்ட ரூபா 5,276,430 பெறுமதியான பொருட்கள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 18,972,443 தொகையான காசு மற்றும் காசிற்கு சமமானவைகள் ரூபா 1,399,843 ஆன வைப்பு முற்பணங்களிலும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஐ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதுளை அடிப்படை அலுவலகத்தின் ஒன்பது செயற்திட்டங்கள் தொடர்பான பெறவேண்டிய பிடி காசு மீதி ரூபா 9,217,282 ஆக இருந்தது. எவ்வாறாயினும், கடன் பத்திரத்தின் பிரகாரம், இது ரூபா 245,266,449 ஆக காட்டப்பட்டது. எனவே, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றில் காட்டப்பட்ட பெறவேண்டிய பிடிகாசு மீதி ரூபா 236,049,167 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஒ) பணியகமானது ஆறு செயற்திட்டங்கள் தொடர்பில் ஆண்டு இறுதி கடன்பட்டோர் மீதியை மதிப்பிடுகையில் கொடுப்பனவு சான்றிதழ் / சான்றுபடுத்திய பட்டியலிலுள்ள தொகைகளை கருத்திற்கொண்டிருக்காததுடன இதன் விளைவால், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றில் காட்டப்பட்ட கடன்பட்டோர் மீதிகள் ரூபா 20,766,409 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) 2013 ஆம் ஆண்டு இறுதிவரை வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காத 2012 இல் வழங்கப்பட்ட இரண்டு காசோலைகள் தொடர்பில் ரூபா 321,793 ஆன கூட்டு மொதடத தொகை சீராக்கப்படாமல் கணக்குகளில் இருந்தது. நிதிக்கூற்றில் காட்டப்பட்ட அதாவது இரண்டு காசு மீதிகள் மற்றும் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) 2013 ஆம் ஆண்டிற்காக பணியகத்தின் நிர்மாணப் பிரிவிற்கு ஆலோசனைப் பிரிவால் சாட்டுதல் செய்யப்பட்ட ரூபா 85,374,137 தொகையான கட்டணங்கள் திரண்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கின்ற போது நீக்கப்பட்டிருந்ததுடன் இதன் விளைவால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றில் காட்டப்பட்ட அத்தகைய இரண்டு ஆலேசனைக் கட்டணங்கள் மற்றும் நிர்மாணக் கிரயம் ரூபா 85,374,137 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(க) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 1397 மற்றும் 1540 ஆம் இலக்கங்கள் கொண்ட செயற்திட்டங்கள் தொடர்பில் எந்தவொரு ஒப்பந்த முரணும் இருக்கவில்லை. எவ்வாறாயினும், ரூபா 10,980,249 இற்கான நிகழத்தக்க ஏற்பாடு பூர்த்தியாக்கப்பட்ட சதவீத முறை அடிப்படையில் 2013 ஆம் ஆண்டிற்காக அந்த செயற்திட்டங்களின் இலாபங்களின் கணிப்பீட்டில் கணக்குகளில் செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவால், நிதிக்கூற்றில் காட்டப்பட்ட வருமானம் ரூபா 4,888,575 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(கா) கட்டுப்பத்தை அடிப்படை அலுவலகம் தொடர்பான நிதிக்கூற்றுக்களிலுள்ள நடைமுறைச் சொத்துக்களின் கீழ் தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் மற்றும் பெறவேண்டிய பிடி காசு மீதிகள் உரிய செயற்திட்டங்களின் சான்றுபடுத்திய விலை பட்டியல்களில் மீதியை எடுக்காமை காரணமாக முறையே ரூபா 30,707,363 மற்றும் ரூபா 240,482 ஆல் அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(கி) நியம தொழில்நுட்ப குழுவால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம், 1339 ஆம் இலக்க செயற்திட்டத்தின் ஒப்பந்த தொகை ரூபா 22,786,975 ஆக இருந்தது. அதேநேரம், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இது ரூபா 23,524,219 ஆக இருந்தது.

இதன்படி, வருமானம் ரூபா 737,244 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், வருமானம் மற்றும் ரூபா 24,359,361 ஆன மொத்தக் கிரயத்தை ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டிற்காக அந்த செயற்திட்டத்திலிருந்து பணியகத்தில் நிலைத்திருந்தும் நட்டம் ரூபா 1,572,786 ஆகும்.

(கீ) வியாபார கடன்பட்டோருக்கு இழப்பீட்டு மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் ரூபா 400,024,049 கூட்டு மொத்தத் தொகையான பெறவேண்டிய பிடி காசு மீதி சப்ரகமுவ மற்றும் பத்தரமுல்ல தள அலுவலத்தில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து ஆண்டுகளிற்கு மேல் நிலுவையாக இருந்தது.

### 2.3.3 இனங்காணப்படாத வித்தியாசங்கள்

மீளாய்வாண்டிற்கான தொகுதி மற்றும் பணியகத்தின் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்ட பின்வரும் விடயங்கள் இலாப கணிப்பீட்டிற்காக பயன்படுத்தப்பட்ட தொகையிலிருந்து வேறுபட்டிருந்தது.

| விபரங்கள் | காசுப்பாய்ச்சல் கூற்றின்படி தொகை | வருமான கூற்றின்படி தொகை | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| நட்ட மற்றும் ஐயக்கடன் கடன்பட்டோர் | 270,826,569 | 314,363,617 | 43,537,048 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரண கைதவிர்ப்பு மீதான நட்டம் | 1,319,392 | 18,907 | 1,300,485 |

### 2.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) டி 542, 609, 210 மற்றும் 566 ஆம் இலக்கங்கள் கொண்ட செயற்திட்டங்கள் தொடர்பில் ரூபா 3,213,047 கடன்பட்டோர் மீதி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது. அந்த மீதிகள் அறவீட்டிற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் 2015 மார்ச் மாதத்தில் உள்ளவாறு இருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) ரூபா 415,769,642 ஆன நிலுவையாகவிருக்கின்ற கடன்பட்டோர் அறவீட்டிற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் 2013 திசெம்பர் 31 இல் நான்கு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாது இருந்தது

(இ) பதுளை மற்றும் வட மத்திய தள அலுவலகத்தால் அமுலாக்கப்பட்ட 16 செயற்திட்டங்கள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும், வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டியவை மற்றும் அவரகளிற்கு செலுத்த வேண்டியவை முறையே ரூபா 68,229,420 மற்றும் ரூபா 12,306,686 என்பன தெளிவு படுத்தப்படாது 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றில் அந்த செயற்திட்டங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான வரைவு வருடாந்த அறிக்கையின் பிரதி நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1994 யூன் 04 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை | ஓய்வுபெறல் படி, வேதனப் படிகள் மற்றும் தொழில்சார் படிகள் போன்ற பல்வேறு படிகள் பொது திறைசேரியின் அனுமதி இல்லாமல் பணியகத்தின் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படை ஊழியர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2013 இல் செலுத்தப்பட்ட மொத்த தொகை ரூபா 26,323,659 ஆக இருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான சீஈசீபீ மற்றும் தொகுதிகளின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான முறையே ரூபா 682,076,563 மற்றும் ரூபா 695,853,050 ஆன நேரொத்த வரிக்கு முந்திய தேறிய இலாபங்களுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 584,746,149 மற்றும் ரூபா 610,013,445 வரிக்கு முந்திய தேறிய இலாபததை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் முறையே ரூபா 97,330,414 மற்றும் ரூபா 85,839,605 அல்லது 14.27 சதவீதம் மற்றும் 12.34 சதவீதமான வீழ்ச்சியைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 90,945,307 ஆல் செயற்பாட்டு செலவினங்கள் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக உள்ளன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகமானது அதன் 1471 உத்தியோகத்தர் வலு மற்றும் ரூபா 16,179 மில்லியன் கொண்ட மொத்த சொத்துக்கள் என்வற்றினைப் பயன்படுத்துவதன் மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 584 மில்லியன் வரிக்கு மந்திய தேறிய இலாபத்தை உழைத்திருந்தது. மேலும், அது பணியகத்தின் மொத்த சொத்துக்களின் 3.6 சதவீத இலாபத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

(ஆ) பணியகத்தின் கூறுபடுத்தப்பட்ட இலாபத்தை பகுப்பாய்வு செய்கின்ற போது, நிர்மாணப் பிரிவு மற்றும் ஆலோசனைப் பிரிவு முறையே இலாப எல்லை 118.6 சதவீதம் மற்றும் 55.5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்திய அதேநேரம் ஏனைய வளங்களிலிருந்தாக எதிர்மறை இலாப எல்லை 74.1 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. பெறுமானத்தேய்வு, பதவியணியினர் கிரயம், மேலதிக நேரப்படி, பதவியணியினருக்கான ஊக்குவிப்பு மற்றும் தலைமை அலுவலக கட்டணம் போன்ற நிர்மாண செயற்திட்டங்கள் தொடர்பான உறிஞ்சப்பட்டிருக்காத நேரில் செலவினத்தை கருதிய எல்கேஏஎஸ் 11 இன் பிரகாரம், இலாப

கணிப்பீட்டிற்கான கிரய இனங்காணலை பிரயோகிக்காமை காரணமாக வெளிப்படுத்திய நிர்மாணப் பிரிவினுடைய இலாபத்தில் அசாதாரண அதிகரிப்பு காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் செயற்பாட்டு இலாப எல்லை மற்றும் தேறிய இலாப எல்லை முறையே 2.56 சதவீதம் மற்றும் 2.17 சதவீதமாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அந்த இலாப எல்லைகள் முறையே 1.29 சதவீதம் மற்றும் 0.86 சதவீதமாக குறைவடைந்திருந்தது.

**3.3.1 செயலாற்றல் மீளாய்வு**

மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தின் ஆலோசனைப் பிரிவு பொறியியல் ஆலோசனையாளர்களின் சகல வகைகளில் தேசத்தை பாதுகாப்பதற்கு சகல அவசியமான பௌதீக மற்றும் மனித வளங்களும் முழுமையாக வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், தற்போது மத்திய பொறியியல் உசாத்துணை பணியகமானது பணியகம் உருவாக்குகின்ற நோக்கங்களிற்கு முரணாக ஆலோசனை சேவையை தவிர நிர்மாண வேலைகளில் பிரதானமாக கவனம் செலுத்தியிருந்தது.

பணியகத்தின் தலைவர் இது தொடர்பின் பின்வருமாறு குறிப்பிட்டார்

*மத்திய பொறியியல் உசாத்துணை பணியகமானது மகாவலி பகுதியின் இறுதியில் மரபு ரீதியாக இருந்த நிலைமையில் ஆலோசனை வேலை கிடைக்காதிருந்த 1990 இற்கு முன்னிருந்து நிர்மாணத்தில் ஈடுபாட்டை பெறுவதற்கு காரணமாக இருந்தது.*

*மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கான இந்த நெருக்கமான தெரிவு நிர்மாண வேலைகளில் ஈடுபாட்டை பெறுவதற்காக இருந்தது. நினைவூட்டுவதற்கு எது முக்கியமாகவுள்ளது என மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் எந்தவொரு ஒப்பபந்தகாரரும் செய்யவேண்டிய நிர்மாண வேலைகளில் ஈடுபாட்டை பெற்றிருக்கவில்லை. அதன் ஆலோசனை சேவைகளின் அனுசரனையை பயன்படுத்தி பொறியியல் -கொள்வனவு – நிர்மாண முறையை அறிமுகப்படுத்தி புதிதாக தொடங்கியிருந்தது. எவ்வாறாயினும், பயங்கரவாதத்தின் முடிவிலிருந்த நிலையை முன்னேற்றுவதற்கு மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் ஆலோசனை வேலையை படிப்படியாக திரும்ப பெறுகின்றதாக உள்ள அதேநேரம் விசேடமாக வரையறுத்த மத்திய பொறியியல் சேலை (தனியார்) என்ற பெயருடன் அறிமுகப்படுத்தி நிர்மாண வேலைகளை செய்கின்னறன.*

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பணியகத்தின் பணிப்பாளர் சபை பொதுத் திறைசேரியின் முன்னங்கீகாரம் இல்லாமல் பணியகத்தின் ஊழியர்களிற்கு ஊக்குவிப்பு திட்டங்கள் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை அனுமதித்திருந்தது. 2013 இல் செலுத்தப்பட்ட அத்தகைய ஊக்குவிப்புகளின் மொத்த தொகை ரூபா 100,140,316 ஆக இருந்தது.

(ஆ) மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தால் கையேற்கப்பட்ட நிர்மாண ஒப்பந்தங்களின் 90 சதவீதம் போட்டித் தன்மை ஊடாக ஒப்பந்தங்களை பெறுவதை அனுமதிக்காமல் சீஈஎஸ்எல் இற்கு அந்த கம்பனி ஸ்தாபிப்பின் பிரதான நோக்கமாக உள்ளவற்றிற்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு சொந்தமான மனித, பௌதீக மற்றும் ஏனைய வளங்களை பயன்படுத்தி கம்பனியால் மேற்குறிப்பிட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், இரண்டு

அமைப்புக்களிற்காகவும் அளவீட்டு பட்டியல், மதிப்பீடுகள் மற்றும் விலைப்பட்டியல்கள் தயாரித்தல் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தின் ஒரே ஆளணியால் செய்யப்பட்டன.

### 4.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த நிர்மாணத்தின் குறைவான செயலாற்றல் காரணமாக கையேற்கப்பட்ட 24 நிர்மாண ஒப்பந்த வேலைகள் தொடர்பில் மீளாய்வாண்டின் போது பணியகத்தால் ரூபா 60,369,218 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) நியம தொழில்நுட்ப குழுவால் அனுமதிக்கப்பட்ட 1353 எண்ணிக்கையான செயற்திட்டங்களின் ஒப்பந்த தொகை ரூபா 27,112,144 ஆக இருந்தது. ஆனால், அந்த செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட உள்ளபடியான கிரயம் ரூபா 37,523,409 ஆக இருந்தது. எனவே, அந்த செயற்திட்டம் மீது பணியகத்திற்கு விளைந்த நட்டம் ரூபா 10,410,665 ஆக இருந்தது.

### 4.3 மனிதவள முகாமைத்துவம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணியகத்தின் அனுமதித்த மற்றும் உள்ளபடியான பதவியணி முறையே 1,132 மற்றும் 1,471 ஆக இருந்தது. சகல ஊழியர் வகுதிகளிலும் 339 ஆல் அனுமதிக்கப்பட்ட பதவியணியை விஞ்சி ஆட்சேர்ப்புகள் செய்யப்பட்டன. முறைமையான பதவியணி முகாமைத்துவம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியானவற்றிற்கும் இடையில குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை குறிக்கின்றது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது பணியகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) பொருளிருப்பு கட்டுப்பாடு மற்றும் இருப்பு முகாமைத்துவம்
(இ) நிர்மாண பொருட்களின் கொள்வனவு
(ஈ) நிதி முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த வருமானத்தின் பட்டியலிடல்
(ஊ) கடன்பட்டோர் மற்றும் பெறவேண்டியவை மீதான கட்டுப்பாடு
(எ) கடன்கொடுத்தோர், முற்பணங்கள் மற்றும் செலுத்த வேண்டியவை மீதான கட்டுப்பாடு
(ஏ) செயலாற்றல் மதிப்பாய்வு
(ஐ) ஒப்பந்த நிர்வாகம்

(ஒ) முதலீடு மற்றும் துணைக்கம்பனி மீதான கட்டுப்பாடு
(ஓ) மனிதவள முகாமைத்துவம்